செ.வெ.எண். 57/பிப்ரவரி                    பத்திரிக்கைச் செய்தி                    தேதி : 29.02.2016

**மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 18 பயனாளிகளுக்கு ரூ. 1,40,700/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---




தருமபுரி மாவட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (29.02.2016) மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக குடிநீர் வசதி, பட்டா வேண்டுதல், ஓய்வூதியம் பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி, வீட்டுமனை பட்டா, வங்கிக்கடன், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்களான மோட்டார் பொருந்திய மூன்று சக்கர வாகனம், சக்கரநாற்காலி, நவின காதொலிக் கருவி, செயற்கைக்கால், ஊன்றுகோல், எழுத்துக்களை பெரிதாக்கி காட்டும் உருப்பெருக்கி என கோரிக்கைகள் அடங்கிய மனுக்களும் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் வழங்கப்பட்ட மனுக்கள் உட்பட மொத்தம் 358 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

முன்னதாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு செயற்கை காலும், 4 பயனாளிகளுக்கு முடநீக்கு உபகரணமும், 4 பயனாளிகளுக்கு எழுத்துக்களை பெரிதாக்கிகாட்டும் உருப்பெருக்கியும், அரசு பள்ளியில் கல்வி பயின்ற 10 மற்றும் 12-ம் வகுப்பு தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பிடித்த பார்வையற்ற மாணவிகள் 6 பேருக்கு ரூ. 72 ஆயிரத்திற்கான காசோலையினையும் என மொத்தம் 18 பயனாளிகளுக்கு ரூ. 1 இலட்சத்து 40 ஆயிரத்து 700/- மதிப்பிலான நலத்திட்டங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.சங்கர், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திரு. ஸ்ரீதர், தனி துணை ஆட்சியர் (சிறப்புத்திட்டங்கள்) திரு. பிச்சைராமன், தனித் துணையாட்சியர்கள் (ச.பா.தி) செல்வி எஸ். வள்ளி, ஆதிதிராவிடர் நலன் அலுவலர் திருமதி. இலாஹிஜான், மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. மகிழ்நன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.